ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது
අංක 2331/15 - 2023 මැයි මස 09 වැනි අඟහරුවාදා - 2023.05.09
*2331/15 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39 அ (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2019, மே மாதம் 08 ஆம் திகதிய 2122/24 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் பிரசுரிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டின் 88 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிடப்பட்ட காணித் துண்டுகளினை முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 அ (1) ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜஊட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.*

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

*எனது இல. : 4-3/7/2018/HW/392*
*பிரதேச செயலாளர் இல. : 4/1/1/32-K.*
*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,*
*"மிஹிகத மெதுர",*
*இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி*
*பத்தரமுல்லை,*
*2023, ஏப்பிறல் 10.*

**அட்டவணை**

வடமேல் மாகாணம் குருநாகல் மாவட்டம், குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில் இல. 836- குருநாகல் நகரம், தெலியாகொன்ன கிராம அலுவலர் பிரிவில் தெலியாகொன்ன கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2019.12.03 ஆம் திகதிய கு. 2445 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்டுள்ள பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லை:

**01. துண்டு இல. 9 - பொக்காவெல கும்புர - விஸ்தீரணம்: 0.0338 ஹெக்டயார்**

வடக்கு : ஏ. எஸ். கரீம் உரிமைகோரும் கரந்தகஹ கும்புர; கிழக்கு : ஏ. எஸ். கரீம் உரிமைகோரும் கரந்தகஹ கும்புர மற்றும் ஆ. வ. கு. 2366 இல் துண்டு இல. 10 மற்றும் 11; தெற்கு: ஆ. வ. கு. 2366 இல் துண்டு இல. 11 மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு இல. 10; மேற்கு: துண்டு இல. 10, 11 மற்றும் ஏ. எஸ். கரீம் உரிமை கோரும் கரந்தகஹ கும்புர.

EOG 05 -0037

1A – G39434 – 19(2023/05) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*